நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருமங்கலம்

முன்னிலை.**திரு.ப.செல்வகுமார், பி.ஏ., பி.எல்.,**

நீதித்துறை நடுவர், திருமங்கலம்.

2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01ம் நாள் சனிக்கிழமை

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.37/2021

**CNR No.TNMD14 - 000111 - 2021**

*****

அரசுக்காக ஆய்வாளர்,

திருமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலையம்,

குற்ற எண்.09/2020 ...குற்றமுறையிடுபவர்

/எதிரிடை/

1. அருண்பிரசாத் (வயது 39/2022),

த/பெ.ராஜேந்திரன்,

2. ராஜேந்திரன் (வயது 64/2022),

த/பெ.பெருமாள்,

3. ஞானசௌந்தரி (வயது 62/2022),

க/பெ.ராஜேந்திரன்,

4. அர்ச்சனா ராணி (வயது 35/2022),

த/பெ.ராஜேந்திரன்,

1 முதல் 4 வரையுள்ள எதிரிகளின் முகவரி:–

ஆண்டிபட்டி, தேனி மாவட்டம். ...குற்றம் சாட்டப்பட்டவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | **ஆண்டு பட்டிகை வழக்கு எண்.37/2021** | | |
| 2. | காவல் நிலைய பெயர் & குற்ற எண் | | திருமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண்.09/2020 |
| | **குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த விபரம்** | | |
| 3. | எதிரிகளின் பெயர் | : | 1. அருண்பிரசாத் |

| | | | |
|---|---|---|---|
| | | | 2. ராஜேந்திரன்<br>3. ஞானசௌந்தரி<br>4. அர்ச்சனா ராணி |
| 4. | எதிரிகளின் தந்தை பெயர்/கணவர் பெயர் | : | 1. த/பெ.ராஜேந்திரன்<br>2. த/பெ.பெருமாள்<br>3. க/பெ.ராஜேந்திரன்<br>4. த/பெ.ராஜேந்திரன் |
| 5. | தொழில் | : | A1 – டிரைவர்<br>A2 – மேலாளர் |
| 6. | எதிரிகளின் முகவரி | : | 1 முதல் 3 வரையுள்ள எதிரிகளின் முகவரி:– ஆண்டிபட்டி, தேனி மாவட்டம். |
| 7. | எதிரிகளின் வயது | : | 1. 39/2022<br>2. 64/2022<br>3. 62/2022<br>4. 35/2022 |
| | **தேதி விபரங்கள்** | | |
| 8. | சம்பவம் | : | 05.12.2011 |
| 9. | புகார் | : | 29.05.2020 |
| 10. | கைது தேதி | : | –– |
| 11. | பிணை விடுப்பு | : | Anticipatory bail |
| 12. | Committal | : | -- |
| 13. | விசாரணை துவக்கம் | : | 15.05.2026 |
| 14. | விசாரணை முடிவு | : | 30.07.2026 |
| 15. | தண்டணை (அ) ஆணை | : | குற்றவாளிகள் இல்லை என தீர்மானிக்கப்படுகிறது. |
| 16. | தீர்ப்புரை நகல் (அ) நீதிமன்ற முடிவு எதிரிகளுக்கு சார்பு செய்தல் | : | -- |
| 17. | Period of Remand of the accused | : | - |

<table>
<tr><td>18.</td><td>Date of filing of the final report</td><td>:</td><td>08.03.2021</td></tr>
<tr><td>19.</td><td>Date of questioning U/s.240, 246 & 251 of Cr.P.C.</td><td>:</td><td>15.10.2022</td></tr>
<tr><td>20.</td><td>Miscellaneous petition and their results</td><td>:</td><td>U/s.311 Cr.P.C – Allowed<br>U/s.359 BNSS - Dismissed</td></tr>
<tr><td>21.</td><td>Date of examination in chief and cross</td><td>:</td><td><table><tr><th>PW's</th><th>Chief</th><th>Cross</th></tr><tr><td>1.</td><td>15.05.2026</td><td>--</td></tr><tr><td>2.</td><td>15.05.2026</td><td>--</td></tr><tr><td>3.</td><td>23.07.2026</td><td>23.07.2026</td></tr></table></td></tr>
<tr><td>22.</td><td>Date of examination accused U/s.313 Crpc</td><td>:</td><td>30.07.2026</td></tr>
<tr><td>23.</td><td>Details of abscondence of accused and his appearance/production</td><td>:</td><td>Nil</td></tr>
<tr><td>24.</td><td>Grant of stay by Superior court and the results thereof</td><td>:</td><td>Nil</td></tr>
<tr><td>25.</td><td colspan="3">காலதாமதத்திற்கான காரணம்: இல்லை</td></tr>
</table>

இவ்வழக்கானது கடந்த 08.03.2021ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணையின் போது, அரசின் சார்பாக கற்றறிந்த அரசு வழக்கறிஞர் நிலை –2 அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.தமிழ்செல்வன் அவர்கள் ஆஜராகியும், இது நாள் வரை என் பரிசீலனையில் இருந்து வந்த வழக்கு 30.07.2026ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டு, சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கிடும்.

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கின் வாதிக்கும் 1வது எதிரிக்கும் கடந்த 05.12.2011ம் தேதி ஆண்டிபட்டியில் உள்ள திண்டுக்கல் நாயுடு மகாஜன மண்டபத்தில் திருமணம் நடந்ததாகவும், திருமணத்தின் போது வாதிக்கு 30 பவுன் தங்க நகையும், 50

ஆயிரம் ரொக்க பணமும், 1 லட்சம் ரூபாய் மதிப்பிலான சீர்வரிசை பாத்திரங்கள் கொடுத்ததாகவும், திருமணம் முடிந்த பிறகு வாதி அவரது கணவர் ஊரான ஆண்டிபட்டியில் அவர்களது குடும்பத்தார்களுடன் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்ததாகவும், திருமணமான சில நாட்களிலேயே 2வது மற்றும் 3வது எதிரிகள் வரதட்சணை போதாது என்றும், சீர்வரிசை பொருட்களை குறைகூறியும் வரதட்சணையாக மேலும் 5 லட்சம் வேண்டும் என்று கேட்டு தொடர்ந்து வாதியை துன்புறுத்தி வந்ததாகவும், இது தொடர்பாக வாதியின் தாயார் வாதியின் மாமனார் மாமியாரிடம் இப்போதைக்கு கையில் பணம் இல்லை என்றும், வரும் நாட்களில் கொடுத்து விடுவதாக கூறவும், அதனால் ஆத்திரமடைந்து வாதியின் மாமனார் மற்றும் மாமியார் வாதியை தொடர்ந்து துன்புறுத்தி வந்ததாகவும், அதனை வாதி 1வது எதிரியிடம் சொல்லவும் அதற்கு 1வது எதிரி நீ பணம் வாங்கி வரும் வரை உன்னை துன்புறுத்ததான் செய்வார்கள் என்று மிரட்டி வாதியை அடிக்க முற்பட்டதாகவும், அதன் பிறகு நீ என்று பணம் வாங்கி வருகிறாயோ அதுவரை நீ ஒரு வேளைதான் சாப்பாடு சாப்பிட வேண்டும் என்று மிரட்டி வாதிக்கு சாப்பாடு கொடுக்காமல் பட்டினியாக இருக்க செய்து வாதி வேதனை தாங்க முடியாமல் விஷமருநதை குடித்து மருத்துவமனையில் சேர்த்து உயிர் பிழைத்ததாகவும், வாதிக்கு கடந்த 12.01.2015ம் தேதி நக்சத்ரா என்ற பெண் குழந்தை பிறந்ததாகவும், வாதி குழந்தை பேறுகாலத்துக்காக தாயார் வீட்டிற்கு வந்துவிட்டதாகவும், வந்த நாள் முதல் இதுநாள் வரையில் 1வது எதிரி வாதியையோ அவரது குழந்தையையோ பார்க்க வரவில்லை என்றும், வீட்டிற்கு அழைத்து செல்லவும் இல்லை என்பதால் வாதி அவரது நாத்தனாரான 4வது எதிரியிடம் கேட்ட போது ரூபாய் 5 லட்சம் கொண்டு வந்தால் தான் தனது சகோதரனுடன் வாழமுடியும் இல்லையென்றால் நீ வாழாவெட்டிதான் என்று கூறி இந்த விஷயத்தை

யாரிடமும் சொன்னால் கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டியதாகவும், பின்னர் வாதி நேரில் எதிரிகளின் வீட்டிற்கு போன போது நீ பணம் வாங்காமல் இங்கு வரக்கூடாதுடி தாயோழி மகளே என்று கூறி மாமனார் மாமியார் சத்தம் போட்டு அடிக்க வந்ததாகவுவம், அப்போது வாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து வாதியின் 30 பவுன் நகை பணம் மற்றும் பண்ட பாத்திர சீர்வரிசை பொருட்களை எதிரிகளிடமிருந்து பெற்றுகொண்டதாகவும், 1வது எதிரி வாதியுடன் சேர்ந்து வாழ கோரி தேனி குடும்பநல நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ததாகவும், அதற்கு வாதி 1வது எதிரியிடமிருந்து ஜீவனாம்சம் கேட்டு திருமங்கலம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றும், இந்நிலையில் லாவண்யா என்ற பெண்ணை திருமணம் செய்துள்ளதாக கேள்விபட்டு எதிரிகளிடம் கேட்ட போது எதிரிகள் அனைவரும் சேர்ந்து அனைவரும் பார்க்கும்படி தெருவில் வைத்து திட்டி அவமானப்படுத்தி விரட்டிய குற்றத்திற்காக 1 முதல் 4 வரையுள்ள எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 498(A) IPC & Sec 4 of TNPHW Actன் படி குற்றம் புரிந்துள்ளதாக திருமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் குற்ற இறுதியறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

02. இந்நீதிமன்ற விசாரணைக்கு முன்னிலையான போது எதிரிகளுக்கு வழக்கு நகல்கள் அனைத்தும் குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 207ன் படி இலவசமாக வழங்கப்பட்டன.

03. எதிரிகளுக்கு நகல்கள் வழங்கப்பட்ட பின்னர் போதிய கால அவகாசத்திற்கு பிறகு குற்றம் பற்றி வினவிய போது எதிரிகள் பொய் வழக்கு வழக்கு என்று மறுத்து கூறினார்கள். இரு தரப்பும் கேட்டும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் எதிரிகள் மீது குற்றச்சாட்டுகள் வனைய முதல் நோக்கில் போதுமான ஆரம்ப ஆதாரங்கள் இருந்ததால்

எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 498(A) IPC & Sec 4 of TNPHW Actன் கீழ் குற்றசாட்டுகள் வனைந்து படித்துக்காட்டி விளக்கி கூறி கேள்வி கேட்ட போது எதிரிகள் மீண்டும் குற்றத்தை மறுத்து குற்றவாளிகள் இல்லை என்றார்கள்.

04. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சாஆ.1 முதல் அ.சா.ஆ.2 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:–</u>

05. இவ்வழக்கின் வாதிக்கும் 1வது எதிரிக்கும் கடந்த 05.12.2011ம் தேதி ஆண்டிபட்டியில் உள்ள திண்டுக்கல் நாயுடு மகாஜன மண்டபத்தில் திருமணம் நடந்ததாகவும், திருமணத்தின் போது வாதிக்கு 30 பவுன் தங்க நகையும், 50 ஆயிரம் ரொக்க பணமும், 1 லட்சம் ரூபாய் மதிப்பிலான சீர்வரிசை பாத்திரங்கள் கொடுத்ததாகவும், திருமணம் முடிந்த பிறகு வாதி அவரது கணவர் ஊரான ஆண்டிபட்டியில் அவர்களது குடும்பத்தார்களுடன் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்ததாகவும், திருமணமான சில நாட்களிலேயே 2வது மற்றும் 3வது எதிரிகள் வரதட்சணை போதாது என்றும், சீர்வரிசை பொருட்களை குறைகூறியும் வரதட்சணையாக மேலும் 5 லட்சம் வேண்டும் என்று கேட்டு தொடர்ந்து வாதியை துன்புறுத்தி வந்ததாகவும், இது தொடர்பாக வாதியின் தாயார் வாதியின் மாமனார் மாமியாரிடம் இப்போதைக்கு கையில் பணம் இல்லை என்றும், வரும் நாட்களில் கொடுத்து விடுவதாக கூறவும், அதனால் ஆத்திரமடைந்து வாதியின் மாமனார் மற்றும் மாமியார் வாதியை தொடர்ந்து துன்புறுத்தி வந்ததாகவும், அதனை வாதி 1வது எதிரியிடம் சொல்லவும் அதற்கு 1வது எதிரி நீ பணம் வாங்கி வரும் வரை உன்னை துன்புறுத்ததான் செய்வார்கள் என்று மிரட்டி வாதியை அடிக்க முற்பட்டதாகவும், அதன் பிறகு

நீ என்று பணம் வாங்கி வருகிறாயோ அதுவரை நீ ஒரு வேளைதான் சாப்பாடு சாப்பிட வேண்டும் என்று மிரட்டி வாதிக்கு சாப்பாடு கொடுக்காமல் பட்டினியாக இருக்க செய்து வாதி வேதனை தாங்க முடியாமல் விஷமருநதை குடித்து மருத்துவமனையில் சேர்த்து உயிர் பிழைத்ததாகவும், வாதிக்கு கடந்த 12.01.2015ம் தேதி நக்சத்ரா என்ற பெண் குழந்தை பிறந்ததாகவும், வாதி குழந்தை பேறுகாலத்துக்காக தாயார் வீட்டிற்கு வந்துவிட்டதாகவும், வந்த நாள் முதல் இதுநாள் வரையில் 1வது எதிரி வாதியையோ அவரது குழந்தையையோ பார்க்க வரவில்லை என்றும், வீட்டிற்கு அழைத்து செல்லவும் இல்லை என்பதால் வாதி அவரது நாத்தனாரான 4வது எதிரியிடம் கேட்ட போது ரூபாய் 5 லட்சம் கொண்டு வந்தால் தான் தனது சகோதரனுடன் வாழமுடியும் இல்லையென்றால் நீ வாழாவெட்டிதான் என்று கூறி இந்த விஷயத்தை யாரிடமும் சொன்னால் கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டியதாகவும், பின்னர் வாதி நேரில் எதிரிகளின் வீட்டிற்கு போன போது நீ பணம் வாங்காமல் இங்கு வரக்கூடாதுடி தாயோழி மகளே என்று கூறி மாமனார் மாமியார் சத்தம் போட்டு அடிக்க வந்ததாகவுவம், அப்போது வாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து வாதியின் 30 பவுன் நகை பணம் மற்றும் பண்ட பாத்திர சீர்வரிசை பொருட்களை எதிரிகளிடமிருந்து பெற்றுகொண்டதாகவும், 1வது எதிரி வாதியுடன் சேர்ந்து வாழ கோரி தேனி குடும்பநல நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ததாகவும், அதற்கு வாதி 1வது எதிரியிடமிருந்து ஜீவனாம்சம் கேட்டு திருமங்கலம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றும், இந்நிலையில் லாவண்யா என்ற பெண்ணை திருமணம் செய்துள்ளதாக கேள்விபட்டு எதிரிகளிடம் கேட்ட போது எதிரிகள் அனைவரும் சேர்ந்து அனைவரும் பார்க்கும்படி தெருவில் வைத்து திட்டி அவமானப்படுத்தி விரட்டியதாக உள்ளது.

**அரசு தரப்பு சாட்சிகள்:—**

06. இவ்வழக்கின் வாதி சம்பவம் பற்றியும் மற்றும் புகார் கொடுத்தது பற்றியும் ரேணுகா என்பவர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின் சம்பவம் பற்றி சந்திரா என்பவர் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். இவ்வழக்கினை பதிவு செய்து புலன் விசாரணை மேற்கொண்ட திருமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திருமதி.லலிதாகுமாரி என்பவரை தனக்கு நன்கு தெரியும் என்றும் அவரது கையெழுத்து நன்கு தெரியும் என்றும் கூறி ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியாக திருமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் ராமுத்தாய் என்பவர் அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**எதிரிகளை கு.வி.மு.ச 313(1)(ஆ) பிரிவின் கீழ் வினவுதல்:—**

07. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு எதிராக தோன்றும் அம்சங்கள் குறித்து எதிரிகளிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவியபோது அவற்றை எதிரிகள் பொய் சாட்சியம் என்று கூறியதோடு தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை என்றும் கூறினார்கள். இருதரப்பிலும் வாதுரைகள் கேட்கப்பட்டன.

**வாதுரைகள்:—**

08. அரசு தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரும் எவ்வித முரண்பாடுகளும் இன்றி தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும் அரசு தரப்பில் எதிரிகள்

மீதான வழக்கை எந்தவித சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுவிட்டது என்றும் எனவே எதிரிகளை தண்டிக்க வேண்டுமென்றும் வாதிட்டார்.

09. எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.தமிழ்செல்வன் அவர்கள் வாதிடும் போது அரசு தரப்பு வழக்கு பொய் வழக்கு என்றும் வேண்டுமென்றே தொடுக்கப்பட்ட வழக்கு என்றும் எதிரிகளும் அ.சா.1ம் தற்பொழுது சமாதானமாக சென்று சமாதான மனு தாக்கல் செய்து உள்ளதாகவும், இந்த வழக்கின் சம்பவ சாட்சிகள் அனைவரும் தங்களது சாட்சியத்தின் போது அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதாகவும் எனவே அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளை எந்தவித சந்தேகங்களுக்கும் இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும் எனவே எதிரிகளை விடுதலை செய்ய வேண்டுமென்றும் வாதிட்டார்.

<u>**ஆய்வுக்குரிய பிரச்சனை:-**</u>

10. இவ்வழக்கில் அரசு தரப்பில் எதிரிகளின் மீதான இ.த.ச பிரிவுகள் 498(A) IPC & Sec 4 of TNPHW Actன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

<u>**சாட்சிகளின் மதிப்பீட்டல்:-**</u>

11. இவ்வழக்கின் வாதி அ.சா.1 மற்றும் சம்பவ சாட்சியான அ.சா.2 ஆகியோர்கள் இந்நீதிமன்றத்தில் தங்களது சாட்சியத்தின் பொழுது அ.சா.1க்கு கடந்த 05.12.2011ம் வருடம் திருமணம் நடைபெற்றது என்றும், திருமணத்தின் போது அ.சா.1க்கு போதிய சீர்வரிசை செய்தனர் என்றும், திருமணத்தின் பலனாக 12.01.2015ம் தேதி ஒரு பெண் குழந்தை பிறந்தது என்றும், அ.சா.1க்கும் எதிரிகளுக்கும் ஏற்பட்ட மனவேறுபாடு காரணமாக பிரிந்து

வாழ்ந்து வந்ததாகவும், இந்நிலையில் மனவேற்றுமை காரணமாக அவர்கள் மீது 12.04.2016ம் தேதி அ.சா.1 புகார் கொடுத்ததாகவும், அப்போது அ.சா.1 உடைய அனைத்து சீர்வரிசை பொருட்களையும் பெற்றுவிட்டதாகவும், அ.சா.1க்கு ஏற்பட்ட மனவேறுபாடு காரணமாகவும் அ.சா.1 வாழ்க்கைக்கு பயந்தும் எதிரிகள் மீது புகார் கொடுத்ததாகவும், போலீசார் கேட்டு கொண்டதற்கு இணங்க புகார் கொடுத்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்கள்.

12. இவ்வழக்கில் எதிரிகளும் புகார்தாரரும் சமாதானமாக போய்விட்டதாகக் கூறி சமாதானமனு தாக்கல் செய்துள்ளார்கள்.

13. இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட நபரான அ.சா.1 மற்றும் சம்பவ சாட்சியான அ.சா.2 ஆகியோர்கள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இவ்வழக்கின் மற்ற சாட்சிகளை சாட்சியாக விசாரித்தாலும் வழக்கில் எவ்வித பயனும் ஏற்படாது என்று கருதி ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியாக திருமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் ராமுத்தாய் என்பவரை அ.சா.3 ஆக விசாரித்து, அவர் மூலமாக வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் குறியீடு செய்து அரசு தரப்பு சாட்சி விசாரணையை முடித்து அரசு தரப்பு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்கள் மேற்குறிப்பு செய்துள்ளார்.

14. மேற்கண்டவாறு அரசு தரப்பு வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய சாட்சிகளின் சாட்சியங்களை பரிசீலனை செய்கையில் அவர்கள் எந்த இடத்திலும் எதிரிகள் அ.சா.1ஐ கொடுமைப்படுத்தியதாகவோ, அ.சா.1ஐ பெண் என்றும் பாராமல் வன்கொடுமை செய்ததாகவோ, சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை என்பது தெள்ளத்தெளிவாக தெரிகிறது. இச்சூழ்நிலையில் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை தயார் செய்து, வழக்கின் புலன் விசாரணையை மேற்கொண்டது பற்றி அ.சா.3

ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்திருந்தாலும் எதிரிகளை வழக்கு சம்பவத்தோடு தொடர்புபடுத்தி வழக்குடன் இணைக்ககூடிய நேரடி சாட்சியம் எதுவும் இந்த வழக்கில் இல்லாததால் எதிரிகள் மீதான குற்றச்செயல்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே அரசு தரப்பில் வழக்கில் எழுந்துள்ள சந்தேகங்களின் பலன்களை எதிரிகளுக்கு வழங்குவதே நீதியின் பால் உகந்தது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

15. முடிவாக, அரசு தரப்பு வழக்கில் எழுந்துள்ள சந்தேகங்களின் பலன்களை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை இ.த.ச. 498(A) IPC & Sec 4 of TNPHW Actன் கீழ் குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து எதிரிகளை குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

16. சொத்துக்கள் இல்லை.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் அலுவலக கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்)திரு.ப.செல்வகுமார்.,
நீதித்துறை நடுவர்,
திருமங்கலம்.

**<u>பின்னிணைப்பு:-</u>**

**1. அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளின் மாதிரி அட்டவணை:-**

| அரசு தரப்பு சாட்சி எண். | அரசு தரப்பு சாட்சியின் பெயர். | அரசு தரப்பு சாட்சியின் பங்கு |
|---|---|---|
| 1. | திருமதி.ரேணுகா | புகார்தாரர் |

| | | |
|---|---|---|
| 2. | திருமதி.சந்திரா | சம்பவ சாட்சி |
| 3. | திருமதி.ராமுத்தாய் | விசாரணை அதிகாரி |

**2. அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்களின் மாதிரி அட்டவணை:–**

| ஆவண எண். | ஆவணத்தின் பெயர். | ஆவணத்தை நிரூபித்த/ சான்றளித்த சாட்சி |
|---|---|---|
| 1. | புகார் மனு | அ.சா.1 |
| 2. | முதல் தகவல் அறிக்கை | அ.சா.3 |

**3. சான்று பொருள்:–** இல்லை

**4. எதிரிகள் தரப்பு சாட்சிகள்:–** இல்லை

**5. எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள்:–** இல்லை

(ஒம்)திரு.ப.செல்வகுமார்.,
நீதித்துறை நடுவர்,
திருமங்கலம்.

**குறிப்பு:–** 1) விசாரணையின் போது எதிரிகள் பிணையிலிருந்தார்கள்.

2) தீர்ப்பின் விவரம் அரசு தரப்பிற்கு தெரிவிக்கப்பட்டது.

3) விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

**நகல்:–** மாண்புமிகு மதுரை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

/உண்மை நகல்/

SELVAKUMAR Digitally signed by SELVAKUMAR Date: 2026.08.01 15:02:58 +0530

நீதித்துறை நடுவர்,
திருமங்கலம்.